”வந்தே ப்ருந்தாவன ஜலம் வல்லபீஜன வல்லபம் வல்ல பீஜான விபூஷனம் வந்தே ஜக்த் குரூம்” இது மொத்தம் 24 ஸர்கங்கள் இருக்கு. 2641 ஸ்லோகங்கள் கொண்டது. இது பாகவத, இராமாயணம், மஹாபாரதத்த அடிபடையா வைத்து இருக்கு.

ப்ருந்தா என்றால் கூட்டம், கூட்டமாக. கூட்டமா இருக்குறவால காப்பத்துறது. ப்ருந்தாவனத்துக்கு என்ன பெயர் ஸுகந்தவனம். ப்ருந்தாவனம் எப்படி இருக்குனா வேத ஸுகந்தமா இருக்கும். பெருமாள் இருக்க இடத்துல வேதம் இருக்கும். ஏனா எம்பெருமானோட ஸ்வாஷ காற்றே வேதம் தான். வேதஸுகந்தம் ஸுகந்தவனம். இது எங்க இருக்கு வடதேசத்தில் மதுரா நகரத்துக்கு அருகிலுள்ள இடம்.

“மதுரா பாக்கியம் அனன்யபோக்கியமீது” மதுரா பாக்கியம் பெற்றது ஏன் என்றால் எம்பெருமாள் எழுந்தருளியதால். க்ருஷ்ணன் அவதரித்தால் மதுரா புண்ணியம் அடைந்தது. ஸ்ரீரங்கத்த ஏன் திவ்ய ஸ்தலம் சொல்றோம்னா வைகுண்ட பெருமாள் இங்க அருள் புரியுறதால, இதுவும் ப்ருந்தாவனம் தான். பெருமாளுக்கு இரண்டு நக்ஷத்திரம் ரோகிணி, ரேவதி. மூலவருக்கு ரோகிணி, உற்சவருக்கு ரேவதி. ராம பிரான் திருமஞ்ன பண்ண பெருமால்

க்ஷேத்திரம் இது. இதுவும் ராமனுக்கு ஒரு மதுரை, க்ருஷ்ணனுக்கு மதுரா. ப்ருந்தாவனம் என்றால் கூட்டத்தை காப்பத்துற இடம்.

“ஸர்வம் விஷ்னுமயம் ஜகது” எம்பெருமான தவிர்த்து எல்லாத்தையும் காப்பாத்துறது யாருனா பெருமாள். கூட்டத்தை காப்பாற்றுபவன். ஆக ப்ருந்தாங்கிறது எதற்கு பெயர் வைகுண்டத்துக்கு பெயர்.

“வைகுண்டம் போறது மன்னவர் விதியே” வைகுண்டம் போகனும்னா ஆஜார்யம் பண்ணனும்.

“ஆஜார்யஷ பரஸமர்பணம்” பரஸமர்பணம் என்றால் ஜீவன ஒப்படைகிறது. என்னால எதுவும் செய்ய முடியல அப்படினு பக்தி மார்க்காத்தால ஸமர்பிக்கிறது. பெருமாளிடத்திலே ஆஜார்யமே கதி. பெருமாளோட திருவடிகளே ஸரணம்னு புடிச்சுண்டா நம்ம ஜீவாத்மாவ கணக்குல எடுத்துண்டு நாம வைகுண்டம் போகலாம். எது வைகுண்டம் என்றால் நம் அம்மா, அப்பா இருக்கும் இடமே வைகுண்டம். நம்மளோட உண்மையான அம்மா, அப்பா யார் என்றால் ரெங்கநாதரும், தாயார் ரெங்கநாச்சியாரும் தான்.

“மாதா தேவி விஷ்னு பகவான் பிதாவே” என்னுடைய தாய் தந்தை தாயாரும், பெருமாளும் ஆனப்றம் எனக்கு வேற என்ன பெருமை வேண்டிருக்கு எதுவும்

தேவை இல்லை. இந்த பிறவி மட்டுமல்லாது ஏழேழு பிறவிகும் அப்பா அம்மாவா இருக்கவாள மதிக்கனும் அவாளுக்கு விஷ்வாசமா இருக்கனும். தாய் தந்தைக்கு விஷ்வாசமா இருக்கனும், பெருமாள் தாயார்க்கு மிக விஷ்வாசமா இருக்கனும். உறவுகள் கடைசி வரை நிலைக்குமா என்றால் நிலைக்காது. கடைசி வரை நிலைக்கிற உறவு பெருமாள் தாயார் மட்டும் தான்.

ப்ருந்த + அவனம் = ப்ருந்தாவனம். ப்ருந்த என்றால் கூட்டம், அவனம் என்றால் காப்பாற்றுதல். மனுஷால் மட்டும் இல்ல லோகத்துல கூட்டம் கூட்டமாக இருக்க எல்லா ஜீவன்களையும் காப்பாற்றுகிறார்.

"கோ பால: காம் நாத்தி" காம் என்றால் ஜீவராசிகளை காப்பாற்றுபவர். அப்ப லோகத்துல இருக்க எல்லாத்தையும் காப்பாற்றுபவர் எம்பெருமான். ப்ருந்தவனஷலன் என்றால் க்ருஷ்ண பரமாத்மாவான எம்பெருமான்.

"வந்தே ப்ருந்தா வனஷலன் த்வய்தவனே வனேஷர: த்ஸூஸ்யாத் த்வய்தவனம்" த்வய்தவனே வனேஷர: என்றால் காட்டில் ஸ்ஞ்ஜரிகின்றவன்.

'எங்குற்றான் என்று தேடி தேடி அலைந்து ப்ருந்தாவனத்தை கண்டோமே' என்று பாஸூரமே இருக்கு. நம் தேடலான ஒரு வஸ்துவை கண்டால் தான் நம் தேடல் என்பது அடங்கும்.

‘கண்டோம் கண்டோம் கண்ணுக்கு இனியானை கண்டோம்’ ஆக எல்லாரும் உன்மையான வஸ்துவை துலைத்து விட்டு பண போதையில் அலைகின்றோம். தங்கம், பணம் எல்லாமே அநித்யமான வஸ்து. பெருமாள் மட்டும் தான் நித்யமான வஸ்து. லோகத்தில் உள்ள அனைத்து ஜீவ ராசிகளுக்கும் பெருமாள் தான் பெரிய சொத்து. அனைத்து ஜீவாத்மாவுக்கும் எம்பெருமாள் தான் எஜமான்.

“ஸொஸ்மை ஸொப்ரீயதே ஸ்வயமேவ காரியதீ.” எல்லாத்துக்கும் க்ருஷ்ணன் தான் உண்மையான சொத்து. “வந்தே ப்ருந்தாவனசரன் பசுபக்ஷீக் கீரீட கிருமி” எல்லா ஜீவராசிகளையும் காக்கின்றவன். அதை தன் கடமையாக, மனபூர்வமாக விஷ்வாசதோடு, பூர்த்தியாக செய்கின்றவன். மஹா விஷ்வாஷம் என்பதை ஆஜாரியர் தான் சொல்லி குடுப்பார். தர்மங்கல் காப்பாத்தபடுறத்துக்கு ஆஜாரியர்கள் தான் முக்கிய காரணம். ஆஜாரி இல்லை எனில் தர்மமே கிடையாது. ஆஜாரியார் என்பவர் வேதத்த தாத்பரியம் பன்னிண்டு வேதத்துல இருப்பதை கற்றுணர்ந்து அதன் படி நடப்பவர். அவர்கள் தான் தர்மத்தை நிலை நாட்டுபவர். எம்பெருமானோட அருள்கல கண்ணால் வாரி பருகனும். கண்ணுக்கு கண்டவர் கண்ணை கவரும் சிந்தை கொண்ட பெருமாள். பெருமாள் பரிபூரண அழகுடையவர்.